## இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

# முன்னோடி வினாத்தாள்

# 203 – வியாபாரச் சட்டம்
# (BLA)

கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவின் வெளியீடு

**இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்**
**203 – வியாபாரச் சட்டம் (BLA)**

**பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள் (தயவுசெய்து கவனமாக வாசிக்கவும்)**

**அனுமதிக்கப்பட்ட காலம்:**

வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்
விடையெழுத : 03 மணித்தியாலங்கள்

**வினாத்தாள் கட்டமைப்பு:**

- இவ்வினாத்தாள் பகுதி A, பகுதி B, பகுதி C எனும் மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது.
- பகுதி A, பகுதி B, பகுதி C ஆகியவற்றிலுள்ள சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

**புள்ளிகள்:**

- ஒவ்வொரு பகுதிக்குமான புள்ளிகளின் ஒதுக்கீடு :

| **பகுதி** | **புள்ளிகள்** |
|---|---|
| பகுதி A | 25 |
| பகுதி B | 50 |
| பகுதி C | 25 |
| **மொத்தம்** | **100** |

- ஒவ்வொரு வினாவுக்குமான புள்ளிகள் வினாவுடன் காட்டப்பட்டுள்ளன.
- இவ்வினாத்தாளுக்கான சித்திப் புள்ளி 50 % ஆகும்.

**விடைகள்:**

- சகல விடைகளும் தரப்படும் விடைப்புத்தகத்திலேயே எழுதப்பட வேண்டும். வினாத்தாளில் எழுதப்படும் விடைகள் புள்ளியிடலுக்காகக் கருத்திற் கொள்ளப்பட மாட்டாது.
- ஒவ்வொரு வினாவுக்குமான உங்களது விடைகளை ஒரு புதிய பக்கத்தில் எழுத ஆரம்பிக்கவும்.
- சகல செய்முறைகளும் தெளிவாகக் காட்டப்பட வேண்டும்.
- தாளின் ஓரங்களினுள் எழுத வேண்டாம்.

**விடைப் புத்தகங்கள்:**

- ஒவ்வொரு விடைப்புத்தகத்தினதும் முகப்பு அட்டையில் அறிவுறுத்தல்கள் காட்டப்பட்டுள்ளன.

**கணிப்பான்கள்:**

- குறியீட்டு அட்சரகணிதம் மற்றும் வகையீடுகளுக்கான வசதிகளைக் கொண்ட கணிப்பான்கள் தவிர்ந்த எந்தக் கணிப்பானையும் பரீட்சார்த்திகள் பயன்படுத்தலாம். நிரற்படுத்த முடியாத கணிப்பான்கள் அனுமதிக்கப்படும்.

**இணைப்புகள்:**

- செயல் வினைச்சொல் நிரல் – ஒவ்வொரு வினாவும் ஒரு வினைச்சொல்லைக் கொண்டிருக்கும் (OTQ's தவிர்ந்த). பரீட்சார்த்திகள் வினைச்சொல் நிரலில் தரப்பட்டுள்ள வினைச்சொல் வரைவிலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

**நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)**
**பதின்நான்கு (14) கட்டாய வினாக்கள்**

**பகுதி A**

(மொத்தம் 25 புள்ளிகள்)

***வினா 01***

- **இல. 1.1 தொடக்கம் 1.6 வரையான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்க. உமது விடைப்புத்தகத்தில் தெரிவுசெய்யப்பட்ட விடையின் இலக்கத்தை அதற்குரிய வினா இலக்கத்தை எழுதி அதன் எதிரே எழுதுக.**

**1.1** நீதிமன்ற அவமதிப்புக்காக தண்டனை விதிப்பதற்கு நியாயாதிக்கத்தைக் கொண்டுள்ள நீதிமன்றம் எது?

(1) உச்ச நீதிமன்றம் (2) மேன்முறையீட்டு நீதிமன்றம்
(3) மாவட்ட நீதிமன்றம் (4) மாகாண உயர் நீதிமன்றம்

**1.2** பின்வருவனவற்றுள் 1978 ஆம் ஆண்டின் இலங்கை அரசியலமைப்பில் **உள்ளடக்கப்படாதது** எது?

(1) சனாதிபதியின் அதிகாரங்களும் செயற்பாடுகளும்
(2) பொதுப் பாதுகாப்பு
(3) அரசகரும மொழி தொடர்பான பிரச்சினைகளும் சட்டவாக்க மற்றும் நீதிமன்ற மொழி பற்றிய பிரச்சினைகளும்
(4) குற்றமொன்று இழைத்தமைக்கான தண்டனை

**1.3** பின்வருவனவற்றுள் தனியார் சட்டத்திற்கான ஓர் உதாரணமாக **அமையாதது** எது?

(1) குடும்பச் சட்டம் (2) ஒப்பந்தச் சட்டம்
(3) குற்றவியல் சட்டம் (4) ஆதனச் சட்டம்

**1.4** பின்வருவனவற்றுள் செல்லுபடியான ஒப்பந்தமொன்றின் உருவாக்கத்திற்கான பிரதான தேவைப்பாடொன்றாக **அமையாதது** எது?

(1) மறுபயன் (Consideration)
(2) ஒப்பந்தத் தகவுடமை (Capacity to contract)
(3) ஒப்பந்தத்தின் சட்டரீதியான தன்மை (Legality of the Contract)
(4) ஒப்பந்தத்தினுள் நுழைகின்ற இடம் (Location to enter into the Contract)

**1.5** பொருட்கள் விற்பனைக் கட்டளைச் சட்டத்திற்கிணங்க, விற்பனை ஒப்பந்தமொன்று செய்யப் படக்கூடிய வழிகள்;

a. எழுத்தில்
b. வாய்ச்சொல்லின் மூலம்
c. ஒரு பகுதி எழுத்திலும் மற்றைய பகுதி வாய்ச் சொல்லின் மூலமும்
d. தரப்பினரின் நடத்தை

மேலுள்ளவற்றுள் சரியான கூற்றுக்கள்;

(1) (a) யும் (b) யும் மாத்திரம் (2) (b) யும் (c) யும் மாத்திரம்
(3) (a), (b), (c) ஆகியன மாத்திரம் (4) மேலுள்ள சகலதும்

**1.6** ஒப்பந்தமொன்றின் மீறுகைக்கான ஒப்பந்தப் பரிகாரங்களாக (Contractual remedies) இருக்கக்கூடியவை:

- **(a)** சேதங்களுக்கான நட்டஈடு (Compensation for damages)
- **(b)** குறித்த செயற்பாடு (Specific performance)
- **(c)** உத்தரவு (Injunction)
- **(d)** ஆணையை அழித்தல் (Rescission)

மேலுள்ளவற்றுள் சரியான விடைகள்;

(1) **(a)** யும் **(c)** யும் மாத்திரம் (2) **(b)** யும் **(c)** யும் மாத்திரம்

(3) **(a), (b), (c)** ஆகியன மாத்திரம் (4) மேலுள்ள சகலதும்

**(2 புள்ளிகள் வீதம் 12 புள்ளிகள்)**

- **இல. 1.7 தொடக்கம் 1.9 வரையுள்ள வினாக்களாக இருக்கின்ற கூற்றுக்கள் ஒவ்வொன்றும் சரியானதா அல்லது தவறானதா என்பதைக் குறிப்பிடுக. உங்களது விடையை (சரியானது / தவறானது) விடைப்புத்தகத்தில் வினா இலக்கத்தை எழுதி அதன் எதிரே எழுதுக.**

**1.7** அவசர நிலைமையொன்று காணப்படும்போது அங்கு அவசியம் கருதிய முகவராண்மை (agency by necessity) உருவாகிறது.

**1.8** பொருட்கள் வந்தடைந்ததன் மீது இறக்குமதியாளர் (வாங்குநர்) ஒருவரால் உரிமைக் கோரிக்கை செய்யப்படுவதற்குத் தேவையான ஆவணம் நாணயக் கடிதம் ஆகும்.

**1.9** விற்பனையாளரால் விலை குறிக்கப்பட்டு கடையில் பொருட்கள் காட்சிப்படுத்தப்படுவது கொடைமுனைவுக்கான அழைப்புக்குரிய (invitation to treat) ஓர் உதாரணமாகும்.

**(1 புள்ளி வீதம் – 3 புள்ளிகள்)**

- **இல. 1.11 தொடக்கம் 1.14 வரையுள்ள வினாக்களுக்கான குறுகிய விடைகளை உமது விடைப்புத்தகத்தில் வினா இலக்கத்தை எழுதி அதன் எதிரே எழுதுக.**

**1.10** சர்வதேச வணிகத்தில் பயன்படுத்தப்படும் கொடுப்பனவு முறைகள் இரண்டினைக் (02) குறிப்பிடுக.

**1.11** நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின் கீழான குற்றங்கள் இரண்டினைக் (02) குறிப்பிடுக.

**1.12** CIF விற்பனையாளர் ஒருவரின் கடமைகள் இரண்டினைப் (02) பட்டியலிடுக.

**1.13** வாடகையாளர் (வாடகைக்குப் பெறுபவர்) ஒருவரின் உரிமைகள் நான்கினைக் (04) குறிப்பிடுக.

**1.14** ஊழியர் ஒருவர் ஊழியர் சேம நிதிய (EPF) பங்களிப்பினைப் பெற்றுக்கொள்ளக்கூடிய சந்தர்ப்பங்கள் இரண்டினைக் (02) குறிப்பிடுக.

**(2 புள்ளிகள் வீதம் – 10 புள்ளிகள்)**

**(மொத்தம் – 25 புள்ளிகள்)**

## *பகுதி A நிறைவு*

**ஐந்து (05) கட்டாய வினாக்கள்**

(மொத்தம் 50 புள்ளிகள்)

## பகுதி B

***வினா 02***

**சாரா** என்பவர் நுகேகொடையில் அமைந்துள்ள தனது புத்தம் புதிய வீட்டினை விற்பனை செய்வதற்காக பத்திரிகையில் விளம்பரமொன்றினைப் பிரசுரித்திருந்தார். **ராஜா** என்பவர் அவ்விளம்பரத்தைக் கண்ணுற்றதுடன் அவ்வீட்டு வளாகத்தைப் பரிசீலிக்கும் பொருட்டு அங்கு செல்வதற்கான அனுமதியைப் பெறுவதற்கு **சாராவுக்கு** தொலைபேசி அழைப்பினை மேற்கொண்டார். **ராஜா** அவ்வாதனத்தை பார்வையிடச் சென்றபோது, அங்கே இதே நோக்கத்திற்காக வருகை தந்திருந்த **சாண்டி** என்ற கொள்வனவாளரும் இருந்தார். ஆதனத்தைப் பரிசீலித்ததன் பின்னர், ஆதனத்தின் விலை பற்றி **சாராவிடம் ராஜா** வினவினார். அவர் அதனை 45 மில்லியன் ரூபாய்க்கு விற்கவுள்ளதாகத் தெரிவித்தார். அதற்கு **ராஜா** அதனை 43 மில்லியன் ரூபாய்க்கு விற்பதாக இருந்தால் தான் அதனை வாங்குவதாக **சாராவிடம்** தெரிவித்தார். **சாண்டி** அதனை 40 மில்லியன் ரூபாய்க்குத் தனக்கு விற்குமாறு **சாராவிடம்** கோரிக்கை விடுத்தார். எவ்வாறிருந்த போதிலும், **சாரா** 35 மில்லியன் ரூபாய்க்கு **சாண்டிக்கு** அந்த ஆதனத்தை விற்பனை செய்திருப்பதை ஒரு வாரத்தின் பின்னர் **ராஜா** அறிந்து கொண்டார். **சாராவுக்கும் ராஜாவுக்குமிடையே** விற்பனைக்கான ஒப்பந்தமொன்று இருந்தது எனவும் **சாரா** அவ்வொப்பந்தத்தை மீறியுள்ளார் எனவும் **ராஜா** உரிமைக்கோரிக்கை (claim) செய்திருக்கிறார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை;**

a) **ராஜா** மற்றும் **சாராவுக்கிடையிலும் சாண்டி** மற்றும் **சாராவுக்கிடையிலும்** செல்லுபடியான ஓர் ஒப்பந்தமொன்று காணப்படுகிறதா என்பதை **விவரிக்குக.** **(6 புள்ளிகள்)**

b) **சாராவின்** மகளைக் கடத்துவதாக **சாண்டியால்** விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் காரணமாக **சாரா சாண்டிக்கு** ஆதனத்தை விற்பனை செய்திருப்பின் **சாரா** மற்றும் **சாண்டிக்கிடையிலான** ஒப்பந்தத்தின் செல்லுபடித்தன்மை பற்றி **விவரிக்குக.** **(4 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

***வினா 03***

**இந்து** என்பவர் புதிதாகக் கட்டப்பட்ட அவரது அலுவலக வளாகத்தைத் சுத்தப்படுத்துவதற்காக ஒன்லைன் தளம் ஒன்றில் ஒரு புதிய இலத்திரனியல் தூசு உறிஞ்சும் இயந்திரமொன்றை (vacuum cleaner) வாங்குவதற்காக கட்டளை (order) செய்திருந்தார். அலுவலக வளாகம் இரண்டு தளங்களைக் கொண்டிருப்பதுடன் தரையானது மத்திய கிழக்கு நாடொன்றிலிருந்து அவரால் இறக்குமதி செய்யப்பட்ட விலையுயர்ந்த தரை விரிப்பினால் (carpet) மூடப்பட்டிருக்கிறது. அவர் தூசு உறிஞ்சும் இயந்திரத்திற்காக கிட்டத்தட்ட ரூபா 15 000/= இனைச் செலுத்தியிருந்தார். இந்த இயந்திரம் பற்றிய ஒன்லைன் விளம்பரத்தில் இது நீடித்து உழைக்கக்கூடிய, நம்பகத்தன்மையான மற்றும் பாதுகாப்பான தூசு உறிஞ்சும் இயந்திரம் என விபரிக்கப்பட்டிருந்தது. அவர் அலுவலகத்தின் உட்பகுதி வண்ணத்துடன் பொருந்தக்கூடிய வகையில் நீல மற்றும் சாம்பல் நிறங்களைக் கொண்ட இயந்திரமொன்றை விசேடமாக கட்டளை செய்திருந்தார். எவ்வாறாயினும், அவர் தூசு உறிஞ்சும் இயந்திரத்தைப் பெற்றுக்கொண்டபோது, அது இளஞ்சிவப்பு மற்றும் பொன் நிறம் ஆகியவற்றைக் கொண்டிருந்ததையும் தான் பார்த்த நேர்த்தியான தோற்றத்தில் அது காணப்படவில்லை என்பதையும் கண்டுகொண்டார். அவரது ஊழியர்களில் ஒருவர் அந்த இயந்திரத்தைப் பயன்படுத்த முனைந்தபோது, அது தரை விரிப்பினைச் சேதப்படுத்தியதுடன் பெருஞ் சத்தத்தையும் எழுப்பியது. அவர்களால் அதனைச் சுத்தப்படுத்தும் நோக்கத்திற்காகப் பயன்படுத்த முடியவில்லை.

**நீங்கள் செய்ய வேண்டியது;**

பொருட்கள் விற்பனைக் கட்டளைச் சட்டத்தின் கீழான உட்கிடை நிபந்தனை தொடர்பில் மேலுள்ள விவரணத்தில் ஏதாவது நிபந்தனை மீறல்கள் காணப்படுகின்றதா என **விபரிக்குக** **(10 புள்ளிகள்)**

***வினா 04***

**அல்விசும் பெரேராவும்** மாத்திரமே **வரையறுக்கப்பட்ட XYZ கம்பனியின்** பணிப்பாளர்களாவர். **அல்விஸ்** மற்றும் **பெரேரா** ஆகியோரின் நண்பரான **சில்வா** என்பவர் **அல்விஸ்** மற்றும் **பெரேரா** ஆகியோரால் **வரையறுக்கப்பட்ட XYZ கம்பனியின்** ஒரு பணிப்பாளராக **வரையறுக்கப்பட்ட ABC கம்பனிக்கு** அறிமுகப்படுத்தப்பட்டார். **சில்வா வரையறுக்கப்பட்ட XYZ கம்பனியின்** ஒரு பணிப்பாளராக நியமிக்கப்படவில்லை. **சில்வா, வரையறுக்கப்பட்ட XYZ கம்பனியின்** ஒரு பணிப்பாளர் என்ற ரீதியில் **வரையறுக்கப்பட்ட ABC கம்பனியிடமிருந்து** கடன் அடிப்படையில் ரூபா 2.5 மில்லியனுக்கு மோட்டார் வாகனமொன்றைக் கொள்வனவு செய்தார். எவ்வாறாயினும், இதற்கான கொடுப்பனவைச் செய்வதற்கு **வரையறுக்கப்பட்ட XYZ கம்பனி** மறுப்புத் தெரிவித்ததுடன் **சில்வா** அவர்களை பணிப்பாளர் ஒருவராகத் தாங்கள் நியமனம் செய்யவில்லை என்றும் வாகனமொன்றை வாங்குவது தொடர்பில் கேட்கப்படவில்லை எனவும் **வரையறுக்கப்பட்ட ABC கம்பனிக்கு** அறிவித்திருந்தது.

**நீங்கள் செய்ய வேண்டியவை;**

a) **சில்வாவால்** கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் வாகனத்திற்கான கொடுப்பனவைச் செய்வதற்கு **வரையறுக்கப்பட்ட XYZ கம்பனிக்கு** பொறுப்புள்ளதா என்பதை **விவரிக்குக.**
**(7 புள்ளிகள்)**

b) வலுவாக்கல் மூலமான முகவராண்மை (agency by ratification) உருவாவதற்கான தேவைப்பாடுகள் மூன்றினைக் (03) **குறிப்பிடுக**. **(3 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

***வினா 05***

மாற்றுண்டியல் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 73 ஆனது கேள்வியின் மீது செலுத்தத்தக்கதாக வங்கியாளர் ஒருவர் மீது வரையப்பட்ட மாற்றுண்டியல் ஒன்றென காசோலையை வரைவிலக்கணப் படுத்துகிறது. காசோலை வங்கியாளர் மீது வரையப்பட வேண்டும் என்பதும் அது கேள்வியின் மீது செலுத்தப்பட வேண்டும் என்பதும் காசோலை ஒன்றிற்கான விசேட தேவைகள் ஆகும்.

**நீங்கள் செய்ய வேண்டியவை;**

a) காசோலை ஒன்றின் நான்கு (04) அம்சங்களையும் தொழிற்பாடுகளையும் **விவரிக்குக. (6 புள்ளிகள்)**

b) உண்டியல் ஏற்றுக்கொள்ளப்படாததால் மறுக்கப்பட்டதாகக் கருதப்படக்கூடிய சந்தர்ப்பங்கள் நான்கினை (04) **அடையாளங் காண்க.** **(4 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

***வினா 06***

வியாபார அபிவிருத்தி மற்றும் வியாபாரத்தில் எழுகின்ற சவால்களைக் கருத்திற்கொண்டு பணச் சலவைத் தடுப்புச் சட்டம் மற்றும் நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டம் ஆகியன அறிமுகப்படுத்தப்பட்டன. நிதிப் புலனாய்வு அலகானது 2006 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க நிதி அறிக்கையிடல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கத் தாபிக்கப்பட்டதாகும்.

**நீங்கள் செய்ய வேண்டியவை;**

a) பணச் சலவை (Money Laundering) என்பதால் கருதப்படுவது யாதென **விபரிக்குக.**
**(3 புள்ளிகள்)**

b) நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டத்தின் நோக்கத்தைக் **குறிப்பிடுக.**
**(3 புள்ளிகள்)**

c) நிதிப் புலனாய்வு அலகின் (Financial Intelligence Unit) தொழிற்பாடுகள் இரண்டினைக் (02) **குறிப்பிடுக.** **(4 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

***பகுதி B நிறைவு***

**ஒரு (01) கட்டாய வினா**

**பகுதி C**

(மொத்தம் 25 புள்ளிகள்)

***வினா 07***

**(A)** **சீதா பெஷன் அப்பரல்ஸ்** என்பது 1000 ஊழியர்களுக்கு மேல் பணி புரிகின்ற ஓர் ஆடைத் தொழிற்சாலை ஆகும். இத்தொழிற்சாலையில் பணி புரிகின்ற பணியாளர்களின் சேமநலன் மற்றும் நன்மைக்காக இதன் ஊழியர்கள் அண்மையில் தொழிற்சங்கம் ஒன்றினை உருவாக்கியிருந்தனர். இத்தொழிற்சங்கத்தின் தலைவர் **ரஜீவ்** ஆகும். அவர் தொழிற்சாலை ஊழியர்களின் சுகாதாரம் மற்றும் துப்புரவு தொடர்பான பல பிரச்சினைகள் பற்றி முகாமைத்துவத்திடம் புகார் தெரிவித்திருந்தார். ஆனால், தொழிற்சங்கத் தலைவரினால் செய்யப்பட்ட புகார்கள் தொடர்பில் முகாமைத்துவம் சரியானவாறு கருத்திலெடுக்கவில்லை. எனவே, அவர்கள் அடையாள வேலை நிறுத்தம் ஒன்றிற்குச் செல்வதற்கு தீர்மானித்ததுடன் அடையாள வேலை நிறுத்தத் தினத்தன்று முகாமையானது தாங்கள் தொழிற்சங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்குத் தயாராக இருப்பதாக அறிவித்தது. தொழிற்சங்கத்திற்கும் முகாமைக்குமிடையிலான உடன்படிக்கைகளிலிருந்து உயர்ந்தபட்ச நன்மைகளைப் பெற்றுக் கொள்வதற்கு தாங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய சிறந்த தீர்வுகளுக்கான உமது ஆலோசனைகளை **ரஜீவ்** எதிர்பார்க்கிறார்.

அதே சமயம், **ரஜீவ்** இன் உடன்பிறப்புகளான **கமல்** மற்றும் **கீதா**வுடன் **ரஜீவ்** உம் இணைந்து பங்குடமை வியாபாரம் ஒன்றைச் செய்வதற்கு விரும்பியதுடன் அவர்கள் விளம்பரப்படுத்தல் முகவராண்மை ஒன்றை முன்னெடுக்கும் பொருட்டு உடன்படிக்கை ஒன்றையும் செய்து கொண்டனர். **கீதா** வியாபாரத்தில் மிகவும் துடிப்புடன் ஈடுபட்டதுடன் அவர் வாடிக்கையாளர் களுடனான சகல வியாபாரக் கூட்டங்களிலும் பங்குபற்றினார். **கமல்** வியாபாரத்திற்கான மூலதனத்திற்கு சம அளவில் பங்களிப்புச் செய்திருந்த போதிலும் அவர் விளம்பரப்படுத்தல் முகவராண்மையின் நாளாந்த நடவடிக்கைகளிலிருந்து விலகி இருக்கவே விரும்புகிறார். ஆனால், அவர் தனது மனைவியை பங்காளர் ஒருவராகக் கொண்டு வருவதற்கு விரும்புவதுடன் அதற்கு **கீதா** ஆட்சேபனை தெரிவிக்கிறார். மேலும், வியாபாரத்திலிருந்து கிடைக்கும் இலாபத்திலிருந்து மேலதிக பங்கொன்றினை தனக்குத் தர வேண்டும் எனக் **கீதா** கோருகிறார். இதற்கு **ரஜீவ்** தங்களுக்கிடையிலான உடன்படிக்கையில் இது குறித்துரைக்கப் படவில்லை என விளக்குகிறார். எவ்வாறாயினும், **ரஜீவும் கமலும்** வியாபாரத்தின் தன்மையினை மாற்றுவதற்கு விரும்புவதுடன் **கீதா** அதற்குக் கடுமையான ஆட்சேபனையினைத் தெரிவிக்கிறார். **ரஜீவ்** வியாபாரத்தை முகாமிப்பதில் செய்யும் அவரது பங்களிப்புக்காக தனக்கு கொடுப்பனவு செலுத்தப்பட வேண்டுமெனக் கோருகிறார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை;**

a) தொழிற்சாலை ஊழியர்களுக்கு உயர்ந்தபட்ச நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்காக **ரஜீவ்** பேச்சுவார்த்தை நடத்தக்கூடிய சிறந்த தீர்வு என்னவாக இருக்கும் என்பதை **விபரிக்குக.**

**(7 புள்ளிகள்)**

b) விளம்பரப்படுத்தல் நிறுவனம் தொடர்பில் பின்வரும் பங்காளர்களின் உரிமைகளையும் கடமைகளையும் **ஆராய்க.**

i) கமல்
ii) கீதா
iii) ரஜீவ் **(10 புள்ளிகள்)**

**(B) அருண்** என்பவர் தனது வியாபார நிறுவனத்திற்கு காப்புறுதி ஒன்றைப் பெற்றுக்கொள்ள விரும்பினார். எவ்வாறாயினும், காப்புறுதிச் சட்டம் தொடர்பான அடிப்படை எண்ணக்கருக்கள் பற்றிய எவ்வித தெளிவான விளக்கத்தையும் **அருண்** கொண்டிருக்கவில்லை. காப்புறுதிச் சட்டமானது அவர் புரிந்து கொண்டதன்படி, ஒரு குறிப்பிட்ட நிச்சயமற்ற நிகழ்வு நடைபெற்றால் அதற்கு காப்பீடு வழங்குவதற்கு காப்பீடு அளிப்பவர் ஒப்புக்கொள்கின்ற ஒரு ஒப்பந்தம் எனவும், இதன்படி காப்பீடு அளிப்பவர் காப்பீடு பெற்றவருக்கு ஒரு தொகைப் பணத்தினைச் செலுத்துவார் எனவும் அதற்குப் பதிலாக காப்பீடு பெறுபவர் காப்பீடு அளிப்பவருக்கு தவணைக் கொடுப்பனவுகளைச் செலுத்துவார் எனவும் அவர் எண்ணுகிறார். இந்தச் சூழமைவில், 'நட்ட உத்தரவாதம் (indemnity)' மற்றும் 'பற்றுரிமை மாற்றீடு (Subrogation)' ஆகிய எண்ணக்கருக்கள் இரண்டு வெவ்வேறு நோக்கங்களுக்கு உதவுகின்றன. அவர் காப்புறுதிக்காக விண்ணப்பிப்பதற்கு முன்னர் இந்த இரண்டு அடிப்படை எண்ணக்கருக்கள் பற்றிய விளக்கத்தினைப் பெறுவதற்கு அவர் உங்களது உதவியை நாடுகிறார்.

**நீங்கள் செய்ய வேண்டியது ;**

'நட்ட உத்தரவாதம்' மற்றும் 'பற்றுரிமை மாற்றீடு' ஆகிய எண்ணக்கருக்களை **விவரிக்குக.** (உங்களது விடைக்கு ஆதரவாக உதாரணங்களையும் குறிப்பிடுதல் வேண்டும்)

**(8 புள்ளிகள்)**

**(மொத்தம் 25 புள்ளிகள்)**

***பகுதி C நிறைவு***

# செயல் வினைச் சொல் பட்டியல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| பகுப்பாய்வு (4) | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | பகுப்பாய்வு செய்தல் (Analyze) | தீர்வினை அல்லது பேறினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | | வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate) | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங் களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | | கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss) | முடிவொன்றை அடையும் நோக்கில் விவாதம் மூலம் விபரமாகப் பரீட்சித்தல் |
| | | ஒப்பிடுக (Compare) | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | வேறுபடுத்துக (Contrast) | வேறுபாடுகளைக் காட்டுவதற்காகப் ஆய்வு செய்தல் |
| | | சுருக்கமாகக் குறிப்பிடுக (Outline) | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | தொடர்பாடுக (Communicate) | தகவல்களைப் பங்கிடுதல் அல்லது பகிர்தல் |
| பிரயோகம் (3) | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றுதலும் | பிரயோகிக்குக (Apply) | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |
| | | கணிக்குக / கணிப்பிடுக (Calculate) | கணிதரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | | எடுத்துக்காட்டுடன் விபரிக்குக (Demonstrate) | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | தயாரிக்குக (Prepare) | கேட்கப்பட்ட விடயத்தை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | | தீர்க்குக (Solve) | கணிப்பீடு அல்லது விளக்கங்கள் மூலம் தீர்வு காணல் |
| | | மதிப்பிடுக (Assess) | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | வரைபுத்தாளில் வரைக (Graph) | வரைபடங்கள் மூலம் காட்டுதல் |
| | | கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile) | வேறொன்றுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| முற்றடக்கம் (2) | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தல் | பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக (Define) | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |
| | | விபரிக்குக (Explain) | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | விளக்குக (Describe) | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret) | விளங்கக்கூடிய வகையில் தெளிவுபடுத்துதல் |
| | | ஏற்பிசைவு செய்தல் (Recognize) | அறிவை அல்லது அது சார்ந்த அனுபவத்தைக் கொண்டு செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| அறிவு (1) | விடயங்களை ஞாபகப்படுத்தலும் அடிப்படை எண்ணக்கருக்களும் | நிரற்படுத்துக / பட்டியலிடுக (List) | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |
| | | அடையாளங் காண்க / இனங்காண்க (Identify) | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | | கூறுக / குறிப்பிடுக (State) | திட்டவட்டமாக அல்லது தெளிவாகத் தெரிவித்தல் |
| | | தொடர்புபடுத்துக (Relate) | தர்க்கரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | | வரைக (Draw) | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |

இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

# பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

## 203 – வியாபாரச் சட்டம்
## (BLA)

கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவின் வெளியீடு

***வினா 01 இற்கு பரிந்துரைக்கப்பட்ட விடைகள்***

1.1 – 2

1.2 – 4

1.3 – 3

1.4 – 4

1.5 – 4

1.6 – 4

**(2 புள்ளிகள் வீதம் – 12 புள்ளிகள்)**

1.7 – சரி

1.8 – தவறானது

1.9 – சரி **(1 புள்ளிகள் வீதம் – 03 புள்ளிகள்)**

1.10 – மாற்றுண்டியல்

- சேகரிப்பு உடன்படிக்கைகள்
- நாணயக் கடிதம்
- முற்பணக் கொடுப்பனவு
- இலத்திரனியல் வர்த்தகம் **(ஏதாவது 2 முறைகள்)**

1.11

- பொருட்கள் மீது குறிக்கப்பட்ட விலைக்கு அதிகமாக பொருட்களை விற்பனை செய்தல் அல்லது விற்பனைக்காக விருப்பறிவுப்புச் செய்தல்
- இலங்கையினுள் விற்பனை செய்யும் நோக்கத்திற்காக விற்பனையாளர் ஒருவரால் பொருட்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றபோது அவர் பொருட்களை விற்பனை செய்ய மறுப்பதும் அவற்றைத் தன்வசம் தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதும்
- வணிக நோக்கத்திற்காக வணிகர் ஒருவரால் கொள்வனவு செய்யப்பட்டுள்ள ஏதாவது பொருளை அவர் வைத்திருப்பதை மறுப்பது
- வணிக நோக்கத்திற்காக வணிகர் ஒருவரின் வசம் பொருட்கள் காணப்படும்போது ஏதாவது நிபந்தனைக்கு உட்பட்டு பொருட்களை விற்பனை செய்தல்
- வணிகர் ஒருவரால் அல்லது வேறொரு நபரால் பொருட்கள் பதுக்கிவைக்கப்படுதல் (பதுக்கிவைத்தல் என்பது சாதாரண வணிகத் தேவைக்கு மேலதிகமான அளவுகளில் பொருட்களை இருப்பில் வைத்திருக்கின்ற அல்லது அவற்றை மறைத்து வைத்திருக்கின்ற செயற்பாடு ஆகும்.)
- அதிகாரசபையின் முன்னங்கீகாரமின்றி தயாரிப்பாளர் ஒருவரால் அல்லது வணிகர் ஒருவரால் வாழ்க்கைக்கு அத்தியாவசியமானதென அறிவிக்கப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகளை அதிகரித்தல்

**(ஏதாவது 2 குற்றங்கள்)**

1.12

- ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பொருட்களைக் கப்பலேற்றுவது
- ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்ட சேருமிடத்தில் பொருட்களை விநியோகிப்பதற்கு கடல் வழியாக காவிச்செல்லும் ஒப்பந்தமொன்றைச் செய்வது
- வாங்குபவரின் நன்மைக்காகக் கிடைக்கக்கூடிய காப்புறுதியொன்றை ஒழுங்குசெய்தல்
- பொருட்களுக்கான விபரப் பட்டியலொன்றைத் (invoice) தயாரிப்பது

**(ஏதாவது 2 கடமைகள்)**

1.13

- வாடகைக் கொள்வனவு உடன்படிக்கை காலாவதியாகும் வரை காத்திராமல் பொருட் களுக்கான வாடகைக் கொள்வனவு காலப்பகுதியில் எந்த நேரத்திலும் உடன்படிக்கையை முடிவுறுத்துவதற்கான உரிமையை வாடகைக்குப் பெறுபவர் கொண்டிருக்கிறார்.
- வாடகைக்குப் பெறுபவர் எந்த நேரத்திலும் உடன்படிக்கையை முடிவுறுத்துவதற்கான உரிமையைக் கொண்டிருக்கிறார்.
- ஒரே உரிமையாளருடன் ஒன்றுக்கு மேற்பட்ட வாடகைக் கொள்வனவு உடன்படிக்கைகளைக் கொண்டுள்ள வாடகைக்குப் பெறுபவர், வாடகைக் கொள்வனவு உடன்படிக்கை தொடர்பான கொடுப்பனவைச் செலுத்துவதற்கான உரிமையைக் கொண்டுள்ளார். பொதுவாக, இது பொருத்தமானது என தான் கருதுகின்ற கணக்கிற்கு கொடுப்பனவைச் செய்வதற்கான வாடகைக்குப் பெற்றவரின் உரிமையை இது குறிக்கிறது.
- உடன்படிக்கையில் தனது நலன்களை உட்புகுத்துவதற்கான உரிமையை வாடகைக்குப் பெறுபவர் கொண்டிருக்கிறார்.
- உரிமையாளர் பொருள் ஒன்றை மீளவும் உடமையாகப் பெறும்போது அல்லது அதனை விற்பனை செய்யும்போது எஞ்சுகின்ற ஏதாவது மேலதிக பணத்தினை மீளப் பெறுவதற்கு வாடகைக்குப் பெற்றவருக்கு உரிமை உள்ளது.

**(ஏதாவது 2 புள்ளிகள்)**

1.14

- ஓய்வூதிய வயதை அடையும்போது (ஆண் பணியாளர் எனின் 55 வருடங்கள், பெண் பணியாளர் எனின் 50 வருடங்கள்)
- மீண்டும் திரும்புகின்ற நோக்கமின்றி இலங்கையை விட்டுச் செல்வதாயின் (குடிபெயர்தல்)
- முற்றுமுழுதான அல்லது நிரந்தர அங்கவீனராக மாறுதல் (இது மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட மருத்துவ நிபுணர் ஒருவரால் சான்றுப்படுத்தப்பட வேண்டியுள்ளது)
- திருமணத்தைக் கருத்திற்கொண்டு பணியிலிருந்து பெண் ஊழியர் இராஜினாமாச் செய்யும்போது (அவர் இராஜினாமாச் செய்து மூன்று மாதங்களுக்குள் திருமணம் முடிக்க வேண்டும் அல்லது அவர் திருமணம் முடித்து ஐந்து வருடங்களினுள் இராஜினாமாச் செய்ய வேண்டும்)
- அரச சேவையில் அல்லது உள்ளூராட்சி சேவையில் ஓய்வூதிய உரித்துடைய நியமன மொன்றைப் பெற்றுக் கொள்ளும்போது
- நிதியத்தின் உறுப்பினரொருவர் மரணமடையின், அவரது பின்னுருத்தாளி / பின்னுருத்தாளிகள் நன்மைகளுக்கு உரிமைக் கோரிக்கையிட முடியும்.
- அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் அல்லது அரசாங்கத்திற்குச் சொந்தமான வியாபார அமைப்புகளின் ஊழியர்கள் சேவையை விட்டுச் செல்லும்போது EPF உரித்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

**(ஏதாவது 2 விடயங்களுக்கு)**
**(2 புள்ளிகள் வீதம் – 10 புள்ளிகள்)**
**(மொத்தம் – 25 புள்ளிகள்)**

***பகுதி A நிறைவு***

**ஐந்து (05) கட்டாய வினாக்கள்**
(மொத்தம் 50 புள்ளிகள்)

**பகுதி B**

***வினா 02 இற்குப் பரிந்துரைக்கப்பட்ட விடைகள்***

| | |
|---|---|
| **அலகு 2** | **- ஒப்பந்தச் சட்டம்** |
| கற்றற் பேறுகள் | - செல்லுபடியான ஒப்பந்தமொன்றின் தேவைப்பாடுகளை விவரித்தல்<br>- தவறுகள், திரித்துக் கூறுதல், சட்டத்திற்குப் புறம்பான வலுக்கட்டாயம் மற்றும் செல்வாக்கு |

**a)** தரப்பட்ட விவரணத்திற்கு இணங்க, **சாரா** நுகேகொடையிலுள்ள தனது புத்தம்புதிய வீட்டினை விற்பதற்காக பத்திரிகை விளம்பரமொன்றைச் செய்திருக்கிறார். இது ஒப்பந்தச் சட்டத்தின் கீழ் கொடைமுனைவுக்கான அழைப்பு ஒன்றாகக் கருத்திற் கொள்ளப்பட முடியும்.

**ராஜா** இடத்தைப் பார்க்க வருகைதந்தபோது **சாரா** வீட்டை 45 மில்லியன் ரூபாவுக்கு விற்பதற்கு விருப்பறிவிப்புச் செய்திருக்கிறார். இது **சாரா** ஒப்பந்தத்திற்கான விருப்பறிவிப்பைச் செய்துள்ள முதலாவது சந்தர்ப்பமாகும். ஆயினும், **சாராவால்** செய்யப்பட்ட விருப்பறிவிப்பினை **ராஜா** ஏற்றுக்கொள்ளவில்லை. அதற்குப் பதிலாக ரூபா 43 மில்லியனுக்கு வீட்டை விற்பனை செய்யுமாறு அவரால் **சாராவிடம்** எதிர் விருப்பறிவிப்புக் கோரிக்கை செய்யப்பட்டது. எனவே, **சாராவுக்கும் ராஜாவுக்கும்** இடையே செல்லுபடியான ஒப்பந்தமொன்று காணப்படவில்லை.

அதே விவரணம் மற்றும் வாதங்கள் என்பன **சாராவுக்கும் சாண்டிக்கும்** இடையேயான விடயத்திற்கும் ஏற்புடையதாக இருக்கிறது. ஏனெனில், **சாரா சாண்டிக்கு** விருப்பறிவிப்புச் செய்யும்போதும் அவர் அதனை நேரடியாக ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கூட ரூபா 40 மில்லியன் என்ற எதிர் விருப்பறிவிப்பினைச் செய்திருந்தார். இந்த இடத்தில் **சாராவுக்கும் சாண்டிக்கும்** இடையிலும் செல்லுபடியான ஒப்பந்தமொன்று இருக்கவில்லை. எவ்வாறாயினும், **சாரா** ரூபா 35 மில்லியனுக்கு **சாண்டிக்கு** ஆதனத்தை விற்றிருப்பாராயின் அங்கு **சாராவுக்கும் சாண்டிக்குமிடையே** செல்லுபடியான ஓர் ஒப்பந்தம் காணப்படும்.

**(6 புள்ளிகள்)**

**b)** தரப்பினரிடையே ஒரு செல்லுபடியான ஒப்பந்தமொன்றை உருவாக்க வேண்டுமாயின் அதற்கு ஒரு சில தேவைப்பாடுகள் அவசியமானதாகும். அவை பின்வருமாறு;

- தரப்பினருக்கிடையிலான உடன்படிக்கை
- மறுபயன்
- சட்டரீதியான உறவினை உருவாக்குவதற்கான நோக்கம்
- ஒப்பந்தத்தின் சட்டரீதியான தன்மை
- ஒப்பந்தத்தின் உண்மைத்தன்மை

(பரீட்சார்த்திகள் 'ஒப்பந்தத்தின் உண்மைத்தன்மை' என்பதை இனங்கண்டிருப்பின், அது எதிர்பார்க்கப்பட்ட விடைக்கு போதுமானதாக இருக்கும் என்பதால் மேலுள்ள சகல காரணிகளையும் குறிப்பிடுவது கட்டாயமானதல்ல.)

ஒப்பந்தத்தின் உண்மைத்தன்மையின் கீழ், தரப்பினரிடையே ஒப்புதலற்ற அடிப்படையில் உடன்படிக்கை ஒன்றைக் கொண்டிருப்பது அவசியமானதாகும். எவ்வாறாயினும், ஒப்புதலின்மை ஆனது ஒப்பந்தம் உருவாக்கப்படும் சமயத்தில் இருக்குமாயின், சட்டத்திற்குப் புறம்பான வலுக்கட்டாயத்தின் கூறுகளால் அது பாதிக்கப்படும்.

தரப்பட்ட விவரணத்திற்கு இணங்க, சாராவின் மகளைக் கடத்துவதாக சாண்டி சாராவை அச்சுறுத்தியிருக்கிறார். எனவே, இது ஒப்பந்தத்தின் செல்லுபடித்தன்மையைப் பாதிக்கக்கூடும் என்பதுடன் ஒப்பந்தமும் வறிதாகக்கூடும்.
**<u>போர்டன் வி. ஆம்ஸ்ரோங்</u>**

**(4 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

***வினா 03 இற்குப் பரிந்துரைக்கப்பட்ட விடைகள்***

**அலகு 3 - பொருட்கள் விற்பனைச் சட்டம்**

கற்றற் பேறுகள் – உட்கிடை நிபந்தனைகளையும் உத்தரவாதங்களையும் பற்றி விவரித்தல்

தரப்பட்ட விவரணத்திற்கிணங்க, **இந்து** என்பவர் தனது புதிய அலுவலக வளாகத்தைச் சுத்தப்படுத்துவதற்காக ஒன்லைன் தளம் ஒன்றிலிருந்து ஒரு புதிய இலத்திரனியல் தூசு உறிஞ்சும் இயந்திரமொன்றை ஓடர் (கட்டளை) செய்திருக்கிறார். அவர் தூசு உறிஞ்சும் இயந்திரத்திற்காக ரூபா 15 000/- இனைச் செலுத்தியிருக்கிறார். இந்த இயந்திரம் பற்றிய ஒன்லைன் விளம்பரத்தில் இது நீடித்து உழைக்கக்கூடிய, நம்பகத்தன்மையான மற்றும் பாதுகாப்பான தூசு உறிஞ்சும் இயந்திரம் என விபரிக்கப்பட்டிருந்தது. தரப்பட்ட விடயங்களின் அடிப்படையில், **விபரிப்பை அடிப்படையாகக் கொண்ட** பொருட்கள் விற்பனை ஒப்பந்தம் ஒன்றாக இதனைக் கருத முடியும். பொருட்களின் விற்பனையொன்று நடைபெறும்போது, **உட்கிடை நிபந்தனைகள் ஏற்புடையதாக** இருக்கிறது.

அவர் விசேடமாக அலுவலகத்தின் உட்பகுதி வண்ணத்துடன் பொருந்தக்கூடிய வகையில் நீல மற்றும் சாம்பல் நிறங்களைக் கொண்ட இயந்திரமொன்றைக் கட்டளை செய்திருந்தார். ஆயினும் தான் பார்த்த நேர்த்தியான தோற்றத்தில் அமையாத மற்றும் இளஞ்சிவப்பு மற்றும் பொன் நிறம் ஆகியவற்றைக் கொண்ட இயந்திரமே அவருக்குக் கிடைக்கப் பெற்றிருந்தது. இந்தச் சூழ்நிலையில், பொருளானது அதன் விபரிப்புடன் பொருந்தியிருக்கவில்லை என்பது தெளிவாகிறது. **இந்து** பொருளை வாங்குவதற்கு முன்னர் அதனைப் பரீட்சிப்பதற்கான சந்தர்ப்பத்தைக் கொண்டிருக்க வில்லை. அவர் விளம்பரத்தில் விபரிக்கப்பட்டதன் மீது முற்றிலும் நம்பிக்கை கொண்டிருந்தார். எனவே, இந்த நிலைமையில், கட்டளைச் சட்டத்தின் **பிரிவு 14** ஏற்புடையதாகும்.

அவருடைய பணியாளர்களில் ஒருவர் இயந்திரத்தைப் பயன்படுத்த முயற்சித்தபோது, அது தரை விரிப்பைச் சேதப்படுத்தியதுடன் அதிக சத்தத்தையும் எழுப்பியிருந்தது. அவர்களால் சுத்தப்படுத்தல் நோக்கத்திற்காக அதனைப் பயன்படுத்த முடியவில்லை. இங்கு கட்டளைச் சட்டத்தின் **பிரிவு 15(1)** இன் கீழ் பொருட்களின் விற்பனையுடன் தொடர்புடைய இன்னுமொரு உட்கிடை நிபந்தனை காணப்படுகிறது. அந்தப் பிரிவுக்கு இணங்க, பொருளானது உரிய நோக்கத்திற்குப் பொருத்தமானதாக இருத்தல் வேண்டும். ஆயினும், இந்த விவரணத்தில், அவர்களால் அதனைச் சுத்தப்படுத்தும் நோக்கத்திற்காகப் பயன்படுத்த முடியவில்லை.

மேலும், பொருளின் வணிகத் தரம் பற்றிக் குறித்துரைக்கப்பட்ட **பிரிவு 15(2)** இன் கீழ், உட்கிடை நிபந்தனையொன்று மீறப்பட்டிருக்கிறது. இந்தத் தேவைப்பாடுகளுக்கு இணங்க, பின்வரும் தரங்கள் பொருள் ஒன்றில் காணப்படுதல் வேண்டும்.

- கேட்கப்பட்ட வகையான பொருட்கள், பொதுவாக அவை வழங்கப்படுகின்ற சகல நோக்கங்களுக்கும் பொருத்தமானதாக இருத்தல்
- திருப்திகரமான தோற்றமும் முடிப்பும் (appearance and finish)
- சிறியளவு குறைபாடுகளும் இல்லாதிருத்தல்
- பாதுகாப்பு
- நீடித்துழைக்கும் திறன்

தரப்பட்ட விவரணத்தில், மேற்குறிப்பிடப்பட்ட தரங்கள் இந்த ஒன்லைன் வணிகத்தில் நிறைவேற்றப்படவில்லை. எனவே, **இந்து** பின்வரும் பரிகாரங்களைக் (தீர்வுகளைக்) கொண்டிருக்கிறார்.

- நிபந்தனையை மீறியமைக்காக பொருளை நிராகரிப்பதற்கும் செலுத்தப்பட்ட பணத்தை மீளப்பெறுவதற்கான உரித்தையும் அவர் கொண்டிருக்கிறார்.

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

***வினா 04 இற்காகப் பரிந்துரைக்கப்பட்ட விடைகள்***

| | |
|---|---|
| **அலகு 4** | **- முகவராண்மைச் சட்டம்** |
| கற்றற் பேறுகள் | – முதல்வர் - முகவர் உறவானது ஏற்பிசைவு செய்யப்படக்கூடியதன் கீழான சந்தர்ப்பங்களை விவரித்தல் |

(a) தரப்பட்ட விவரணத்திற்கு இணங்க, **அல்விசும் பெரேராவும் சில்வாவை வரையறுக்கப்பட்ட XYZ கம்பனியின்** ஒரு பணிப்பாளராக **வரையறுக்கப்பட்ட ABC கம்பனிக்கு** அறிமுகப்படுத்தியுள்ளனர். ஆயினும், **சில்வா வரையறுக்கப்பட்ட XYZ கம்பனியின்** ஒரு பணிப்பாளராக நியமனம் செய்யப்படவில்லை. எவ்வாறாயினும், **வரையறுக்கப்பட்ட XYZ கம்பனியின்** ஒரு பணிப்பாளர் என்ற ரீதியில், **சில்வா** கடனடிப்படையில் **வரையறுக்கப்பட்ட ABC கம்பனியிடமிருந்து** கார் ஒன்றினைக் கொள்வனவு செய்திருப்பதுடன் அதன் பின்னர் *வரையறுக்கப்பட்ட XYZ கம்பனியானது* **வரையறுக்கப்பட்ட ABC கம்பனிக்கு** கொடுபட வேண்டிய தொகையைச் செலுத்துவதற்கு மறுப்புத் தெரிவித்திருக்கிறது.

இது ஒரு முரண்தடை மூலமான முகவராண்மையாக (agency by estoppel) இருப்பதுடன் முகவர் ஒருவரின் அதிகாரத்தையும் கொண்டிருக்கிறது. முரண்தடை விதியின் கருத்து யாதெனின், அவர்கள் யாரையாவது அல்லது எதையாவது ஒருமுறை வெளிப்படையாக அல்லது உட்கிடையாக பிரதிநிதித்துவப்படுத்தினால் அதன் பின்னர் அதனை மறுக்கவியலாது என்பதாகும். எனவே, **சில்வாவின்** செயற்பாட்டிற்கு **வரையறுக்கப்பட்ட XYZ கம்பனி** பொறுப்புடையதாகும். இதனால், முரண்தடை மூலமான முகவராண்மையின் காரணங்களால் உருவாக்கப்பட்ட முகவர் - முதல்வர் உறவொன்று இங்கு காணப்படுகிறது.

**(6 புள்ளிகள்)**

(b)
- முகவரானவர் முதல்வரின் சார்பில் முகவர் ஒருவராக வெளிப்படையாக ஒப்பந்தம் செய்திருத்தல் வேண்டும்.
- முகவர் ஒருவரின் மூலம் ஒப்பந்தமொன்றினுள் நுழையும் நேரத்தில் முதல்வருக்கு ஒப்பந்த இயலுமை இருந்திருத்தல் வேண்டும்.
- ஒப்புதல் அளிப்பதன் மூலம் முதல்வர் முன்தேதியிடப்பட்ட பொறுப்புடையவர்.
- முதல்வர் ஒப்புதல் அளிப்பதற்கு முன்னர் உள்நுழைந்த ஒப்பந்தத்தின் அனைத்து பொருண்மைசார் விடயங்களையும் முகவர் வெளிப்படுத்துதல் வேண்டும்.
- சட்டவிரோதமான அல்லது வெறிதாகிய ஒப்பந்தங்களுக்கு ஒப்புதலளிக்கப்பட முடியாது.
- முதல்வர் நியாயமானளவு காலப்பகுதி ஒன்றினுள் ஒப்பந்தத்திற்கு ஒப்புதலளித்தல் வேண்டும்.

**(ஏதாவது 4 விடயங்களுக்கு – 4 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

***வினா 05 இற்காகப் பரிந்துரைக்கப்பட்ட விடைகள்***

| | |
|---|---|
| **அலகு 6** | **- மாற்றத்தகு சாதனங்களுக்கு ஏற்புடையதான சட்டம்** |
| கற்றற் பேறுகள் | - வியாபாரச் சூழமைவில் காசோலைகள், மாற்றுண்டியல்கள் மற்றும் வாக்குறுதிச் சீட்டுகளின் தொழிற்பாடுகளை விவரித்தல்<br>- காசோலைகள் மற்றும் மாற்றுண்டியல்களின் வர்த்தக முக்கியத்துவத்தையும் ஏற்புடையதான கோட்பாடுகள் மற்றும் சட்டங்களையும் விவரித்தல் |

**(a)**

- காசோலை என்பது எழுத்திலுள்ள ஒரு சாதனமாகும். இதில் எந்த வகையான பேனையினால் எழுதவோ, தட்டச்சிடவோ அல்லது அச்சிடவோ முடியும். வாய்மொழியான கட்டளை காசோலையொன்றாகக் கருதப்பட மாட்டாது.
- நிபந்தனையற்ற கட்டளையொன்று காசோலையில் காணப்படுகிறது. கொடுப்பனவுக்கான கோரிக்கையை இது கொண்டிருக்கிறது. இந்த நிபந்தனையற்ற கட்டளையானது வங்கிக்கு வாடிக்கையாளரால் வழங்கப்படுகிறது.
- காசோலைகள் வாடிக்கையாளர் ஒருவரால் அவரது வங்கிக்கு வரையப்படுகிறது. வெளியாட்கள் காசோலைகளை வரைய முடியாது. காசோலைப் புத்தக வசதியானது தங்களுடைய கணக்குகளில் ஆகக்குறைந்த மீதியொன்றைப் பேணுகின்ற வாடிக்கையாளர் களுக்குக் கிடைக்கச் செய்யப்படுகிறது.
- காசோலைகள் வாடிக்கையாளரால் கையொப்பமிடப்படுதல் வேண்டும். கையொப்பமிடப்படாத கட்டளைகள் அல்லது கணக்கு வைத்திராதவர்களால் கையொப்பமிடப்படுகின்ற காசோலைகள் ஏற்பிசைவு செய்யப்பட மாட்டாது.
- காசோலைகள் கேள்வியின் மீது மாத்திரமே கொடுப்பனவு செய்யப்படுகின்றன. காசோலைகள் கொடுப்பனவுக்காகச் சமர்ப்பிக்கப்படும்போது கேள்வியின் மீது கொடுப்பனவு செய்யப்படுதல் வேண்டும்.
- காசோலையில் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய சரியான தொகை குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். காசோலையானது பணத்திற்காக மாத்திரம் இருக்க வேண்டும் என்பதுடன் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய தொகை குறித்ததொரு தொகையாக இருத்தல் வேண்டும்.
- கொடுப்பனவு யாருக்குச் செய்யப்படுகிறதோ அந்த நபர் குறித்ததொரு நபராக இருத்தல் வேண்டும். இது உண்மையான ஒரு நபராகவோ அல்லது போலியானதொரு நபராகவோ (artificial person) இருக்கலாம்.
- காசோலையானது வங்கி வாடிக்கையாளரால் சரியானவாறு திகதி இடப்பட்டிருத்தல் வேண்டும். காசோலையில் சரியானவாறு திகதியிடுவதற்கு வங்கி வாடிக்கையாளர்கள் தேவைப்படுத்தப்படுகின்றனர்.
- காசோலையொன்றிற்கு மூன்று திறத்தவர்கள் (தரப்பினர்) காணப்படுகின்றனர். அவையாவன, காசோலை வரையுநர், காசோலைக்குரிய பெயரினர் மற்றும் பணம் பெறுபவர்.

**(b)**

- காசோலைக்குரிய பெயரினர் (பெறுநர்) வங்குரோத்து அடைதல்
- பெறுநர் ஒரு கற்பனையான நபராக இருப்பின்
- பெறுநர் ஒப்பந்தமொன்றிற்கான இயலுமையைக் கொண்டிருக்காத நபராக இருப்பின்
- நியாயமானதொரு விடாமுயற்சியின் பின்னர், அத்தகைய சமர்ப்பிப்பு செயற்படுத்த முடியாதிருத்தல்
- சமர்ப்பிப்பு முறையற்ற விதத்தில் இருந்த போதிலும், வேறு சில பின்னணி காரணமாக ஏற்பனவானது மறுக்கப்படுதல்

**(ஏதாவது 4 விடயங்கள் – 4 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

*வினா 06 இற்காகப் பரிந்துரைக்கப்பட்ட விடைகள்*

**அலகு 10 – வியாபாரச் சூழல் மற்றும் புதிய ஒழுங்குவிதிகள் தொடர்பான குற்றங்கள்**

கற்றற் பேறுகள் – மோசடி, திருட்டு, பணச் சலவை, இலஞ்சம், கவனயீனம் ஆகியவற்றை வரைவிலக்கணப்படுத்தலும் பிரதான குற்றங்களை விவரித்தலும்

– நிதிப் புலனாய்வு அலகு மற்றும் அறிக்கையிடல் தேவைப்பாடுகள் பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிடுதல்

**(a)** பணச் சலவை என்பது சட்டவிரோதமாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட பணத்தை வங்கிப் பரிமாற்றங்களின் அல்லது வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்களின் ஒரு தொகுதி தொடர்கள் ஊடாகக் கொண்டு செல்வதன் மூலம் அதன் மூலத்தை மறைக்கின்ற சட்டவிரோதச் செயன்முறையாகும்.

**(2 புள்ளிகள்)**

**(b)** பணச் சலவை மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியுதவியளித்தல் போன்ற குற்றங்களைத் தடுத்தல், கண்டறிதல், புலன்விசாரணை செய்தல் மற்றும் வழக்குத் தொடுத்தல் போன்றவற்றை எளிதாக்குவதற்கு சந்தேகத்திற்கிடமான நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான தரவுகளைச் சேகரிப்பது; பணச் சலவை மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் ஆகியவற்றை எதிர்த்துப் போராடுவதற்கு குறிப்பிட்ட சில நிறுவனங்கள் உரிய விடாமுயற்சியுடனான நடவடிக்கைகளை எடுப்பதற்குத் தேவைப்படுத்துவது; இந்தச் சட்டத்தைப் பிரயோகிக்கத்தக்க சகல நிறுவனங்களினதும் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்குப் பொறுப்பான அதிகாரசபையை இனங்காண்பது; மற்றும் அவற்றுடன் இணைக்கப்பட்ட அல்லது தற்செயலான விடயங்களுக்கு வழங்குவது

**(3 புள்ளிகள்)**

**(c)**

- சகல அறிக்கையிடல் நிறுவனங்களிலிருந்தும் காசுக் கொடுக்கல் வாங்கல் அறிக்கைகள் (CTR), இலத்திரனியல் நிதிப் பரிமாற்றம் (EFT) மற்றும் சந்தேகத்திற்கிடமான கொடுக்கல் வாங்கல் அறிக்கைகள் (STR) ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ளல்
- வழக்குத் தொடுத்தலுக்கு உதவுவதற்கான நிதிசார் தடங்களை இனங்காண்பதற்கு சேகரிக்கப்பட்ட தரவுகளைப் பகுப்பாய்வு செய்தல். தரவுகள் பிரதானமாக மூன்று வடிவங்களில் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. அவையாவன; உத்தி சார்ந்ததாக, செயற்பாடு சார்ந்ததாக மற்றும் உபாயம் சார்ந்ததாக.
- பணச் சலவை மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியுதவியளித்தல் என்பன எல்லைதாண்டிய குற்றவியல் நடவடிக்கைகள் என்பதால் உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் தகவல்களைப் பரப்புதல்
- வாடிக்கையாளரை இனங்காணுதல் மற்றும் பதிவுகளைப் பேணுதல் ஆகியவை பற்றிய நிதிசார் மற்றும் ஏனைய அறிக்கையிடல் துறைகளுக்கு விதிகளை வழங்குதல்
- FIU இனால் வழங்கப்பட்ட AML/CFT விதிகள் பற்றிய நிதிசார் மற்றும் ஏனைய அறிக்கையிடல் துறைகளின் இணக்கத்தை உறுதிசெய்வதற்கான பரீட்சைகளை நடத்துதல்
- AML/CFT நடவடிக்கைகள் தொடர்பில் சகல அக்கறையுடைய தரப்பினர் (நாட்டதாரர்கள்) மத்தியிலும் விழிப்புணர்வை அதிகரிப்பதற்காக நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்
- பணச் சலவை மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் ஆகியவற்றின் போக்குகள் மற்றும் வினைத்திறனான தடுப்பு நடவடிக்கைகளை விருத்தி செய்வதற்கான உபாயங்கள் பற்றிய ஆய்வுகளை / தொடர் பகுப்பாய்வுகளை நடத்துதலும்

**(ஏதாவது இரண்டு விடயங்களுக்கு – 4 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

***பகுதி B நிறைவு***

***வினா 07 இற்காகப் பரிந்துரைக்கப்பட்ட விடைகள்***

| | | |
|---|---|---|
| **அலகு 7** | - | **தொழிற் சட்டமும் மாற்று பிணக்குத் தீர்வுகளும்** |
| **அலகு 5** | - | **கூட்டிணைவு (நிறுவனம்) மற்றும் பங்குடமை** |
| கற்றற் பேறுகள் | - | உள்ளடக்கப்பட்டுள்ள ஊழியர்கள், நன்மைகள் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட கழிப்பனவு ஆகியவற்றை விவரித்தல் |
| | - | நடுவர் தீர்ப்புச் செயன்முறை மற்றும் நடுவர் தீர்ப்பாயத்தின் வகிபாகம் ஆகியவற்றை விவரித்தல் |
| | - | பங்குடமைச் சட்டத்துடன் தொடர்பான வாசகங்கள் மற்றும் எண்ணக்கருக்களை அடையாளங் காணலும் விவரித்தலும் |

**(A)**

**(a)** **ரஜீவ்** தொழிற்சாலை ஊழியர்கள் சார்பில் முகாமையுடன் கூட்டு உடன்படிக்கையொன்றினுள் நுழைய முடியும்.

கூட்டு உடன்படிக்கை என்பது பணியாளர்கள் தொடர்பான பின்வரும் விடயங்களை உள்ளடக்கி தொழில்தருநருக்கும் பணியாளர்கள் / தொழிற்சங்கங்களுக்குமிடையே செய்து கொள்ளப்படும் ஒரு உடன்படிக்கை ஆகும்;

- தொழில்தருநரின் விதிமுறைகளும் நிபந்தனைகளும்
- எந்தவொரு தொழில்தருநரினதும் பணியாளரினதும் தொழிற்சங்கத்தினதும் சிறப்புரிமைகள், உரிமைகள் அல்லது கடமைகள் அல்லது
- ஏதாவது தொழிற் பிணக்குகளைத் தீர்ப்பனவு செய்யும் வழிமுறை

கூட்டு உடன்படிக்கையின் தன்மை பற்றி **ரஜீவ்** இற்கு ஆலோசனை வழங்கப்பட வேண்டும். இந்த வகை உடன்படிக்கைகள் **எழுத்தில் சுருக்கப்பட்டு, உடன்படிக்கையில் இரு தரப்பினரும் கையொப்பமிட வேண்டும் என்பதுடன் வர்த்தமானியில் வெளியிடுகின்ற ஆணையாளருக்கு அனுப்பப்பட வேண்டும்.** கூட்டு உடன்படிக்கை பணியாளர்களுக்கு குறைந்தளவே சாதகமானதாக இருப்பின், ஆணையாளர் அதனை வர்த்தமானியில் வெளியிட முடியாது என்பதைத் தெரிவு செய்யலாம். வர்த்தமானியில் பிரசுரிப்பதன் மீது தரப்பினரிடையே தொழில் ஒப்பந்தத்தின் உட்கிடை நிபந்தனை ஒன்றாக அது மாற்றமடைகிறது.

உடன்படிக்கையை முடிவுறுத்தும் பொருட்டு, சொல்லப்பட்ட ஒப்பந்தத்தினால் கட்டுண்டுள்ள தரப்பினர் மற்றைய சகல தரப்பினருக்கும் அதேபோன்று தொழில் ஆணையாளருக்கும் அறிவித்தல் ஒன்றை அனுப்புதல் வேண்டும்.

**(7 புள்ளிகள்)**

**(b)** பங்குடமை ஒன்றில் பின்வரும் வெவ்வேறுபட்ட வகைப் பங்காளர்கள் இருக்கின்றனர்;

- பொதுப் பங்காளர்கள்
- உறங்குநிலைப் பங்காளர்கள்
- சம்பளம் பெறும் பங்காளர்கள்

தரப்பட்ட விவரணத்தில், வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற **கீதா** ஒரு பொதுப் பங்காளராகும். விளம்பரப்படுத்தல் நிறுவனத்தின் நாளாந்த அலுவல்களில் ஈடுபடாத **கமல்** ஓர் உறங்குநிலைப் பங்காளரெனக் கருதப்பட முடியும். **ரஜீவ்**கூட ஒரு பொதுப் பங்காளர் நிலையில் இருக்கிறார். எவ்வாறாயினும், பங்குடமைச் சட்டத்திற்கு இணங்க, **ரஜீவ்**

வியாபாரத்தில் தனது ஈடுபாட்டிற்காக சம்பளமொன்றைக் கோருவதற்கான உரித்து இல்லை. வியாபாரத்தைச் சுமுகமாக முன்னெடுத்துச் செல்வதற்கு ஏனைய பங்காளர்களுக்கு உதவுவது அவரது கடமையாகும்.

**கமல்** வியாபாரத்திற்கு ஒரு புதிய பங்காளராக அவரது மனைவியை கொண்டுவர முடியாது. ஏனெனில், **கீதா** அதற்கு ஆட்சேபனை தெரிவிக்கிறார். **கமல்** தனது மனைவியை ஒரு புதிய பங்காளராக வியாபாரத்தினுள் கொண்டுவர வேண்டுமெனின், அவர் மற்றைய இரு பங்காளர்களினதும் சம்மதத்தைப் பெறுதல் வேண்டும். **கீதாவின்** ஆட்சேபனை காரணமாக அவர் தனது மனைவியை கொண்டுவர முடியாது.

உடன்படிக்கையில் இலாபத்தில் மேலதிக பங்கு பற்றி குறிப்பிடாதபட்சத்தில் **கீதாவால்** அதனைக் கோர முடியாது. எனவே, அவர்கள் இலாபத்தினை அவர்கள் மூவருக்குமிடையே பிரித்தல் வேண்டும்.

**(10 புள்ளிகள்)**

**(B)** ‘நட்ட உத்தரவாதம்’ மற்றும் ‘பற்றுரிமை மாற்றீடு’ ஆகிய எண்ணக்கருக்கள்

| |
|---|
| **அலகு 8 - காப்புறுதிச் சட்டம், குத்தகை, வாடகைக் கொள்வனவு மற்றும் கடன்கள்** |
| கற்றற் பேறுகள் – காப்புறுதிக் கோட்பாடுகளை விவரித்தல் |

காப்புறுதி பெற்றவர் தனக்கு ஏற்பட்ட நட்டத்திற்காக இதைவிட மேலும் பெற முடியாது என்ற அளவில் பெற்றுக்கொள்ளக்கூடிய இழப்பீட்டிற்கு உரித்துடைய கருத்தமைவு நட்ட உத்தரவாதம் ஆகும். வேறு வகையில் கூறுவதாயின், இது பொருள் அல்லது பாதிப்பு ஏற்பட்ட நட்டம் அல்லது சேதத்திற்கான நட்டஈட்டை வழங்குவதுடன் காப்புறுதியிலிருந்து இலாபமொன்றை எடுக்காது. **காஸ்டல்லெய்ன் வி. பிரஸ்டன்**

உதாரணம்:- 05 மில்லியன் பெறுமதியான ஒரு மோட்டார் வாகனம் அதே தொகைக்கு காப்புறுதி செய்யப்பட்டிருந்து 02 மில்லியன் பெறுமதியான சேதமொன்று ஏற்பட்டால், 02 மில்லியன் ரூபாய் மாத்திரமே நட்டஈடாகக் கிடைக்கப்பெறும்.

பற்றுரிமை மாற்றீடு என்பதை ஒரு நபருக்கு மற்றுமொரு நபரின் பிரதியீடு என வரைவிலக்கணப்படுத்தலாம். இங்கு, எந்தவொரு மூன்றாந் தரப்பினருக்கும் எதிராக காப்புறுதி பெற்றவர் தாமாகவே செயற்படுத்தக்கூடிய ஏதாவது பரிகாரத்தைச் செயற்படுத்துவதற்கு காப்புறுதி வழங்குபவருக்கு உரித்து காணப்படுகிறது. இந்த எண்ணக்கரு நட்ட உத்தரவாதக் கோட்பாட்டின் விளைவொன்றாக எழுகிறது. இந்த எண்ணக்கரு ஆயுள் காப்புறுதிக்குப் பிரயோகிக்கப்பட மாட்டாது.

உதாரணம்:- X என்பவர் பொருட்கள் மீதான தீ அபாயக் காப்புறுதியொன்றை பெற்றுக் கொண்டுள்ளார். அதன் பின்னர் Y என்பவரின் அலட்சியத்தினால் ஏற்பட்ட தீ காரணமாக பொருட்கள் அழிவடைந்தன. பற்றுரிமைக் கோட்பாட்டின் கீழ், காப்புறுதிக் கம்பனியால் X இற்கு கொடுப்பனவு செய்யப்படும்போது Y மீது வழக்குத் தொடுக்கின்ற உரிமையானது X இடமிருந்து காப்புறுதிக் கம்பனிக்குச் செல்கிறது.

**(8 புள்ளிகள்)**

**(மொத்தம் 25 புள்ளிகள்)**

## *பகுதி C நிறைவு*